வீட்டு மனைகள் தர இயலும் என்று அறியப்படுகிறது. அரசு ஊழியர்கள் வீட்டு மனை கோரும்போது, இன்றைக்கு வீடு கட்டுகிற பொருட்களின் விலைவாசி எல்லாம் ஏறிக் கொண்டு இருக்கிற நேரத்திலே, விரைவாக இந்த வீட்டு மனைகளை வழங்கினால், அவர்கள் கட்டிக் கொள்வதற்கு வசதியாக இருக்கும். எம்.எம்.டி.ஏ.-வே ஏன் இவ்வளவு காலதாமதம் செய்கிறது ? அதுவும் அரசுத் துறைதான் என்கிற முறையிலே, எம்.எம்.டி.ஏ. வுக்கு ஒரு காலக் கெடு நிர்ணயித்து, அதற்கான, லே அவுட் பெறப்பட்டு, இந்த வீட்டு மனைகளை விரைவாக வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்றும், அங்கே ஆக்கிரமிப்புகள் நடக்காமல் இருக்க தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராசன் அவர்களின் தொகுதிக்காக நான் இதைப் பேசவில்லை. இந்தப் பிரச்சினையில் அரசுக்கு அதிகப் படியான அக்கறை உண்டு என்பதை அழுத்தந்திருத்தமாக நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

இரண்டாவது என்ன கேட்டீர்கள்? (குறுக்கீடு) என்க்ரோச்மென்ட இருக்கிறதா என்பதைப் பற்றி, ஆக்கிரமிப்பு நடைபெறுவதாக அந்தப் பகுதியின் உறுப்பினரே தெரிவிக்கிறார். நானும் பகுதி உறுப்பினரும் ஒரு கூட்டத்தில் பேசும்பொது எந்த வகையிலும் ஆக்கிரமிப்பை ஆதரிக்கக் கூடாது என்றும் ஆக்கிரமிப்பு செய்கிறவர்களை துரத்த வேண்டும் என்றும், கலெக்டர்களுக்கும் மற்றவர்களுக்கும் உத்தரவு பிறப்பிக்கப் பட்டு இருக்கிறது என்றும் தெளிவாகத் தெரிவித்தேன். நான்மட்டும், நான் பங்கு பெற்றிருக்கிற அரசின் தலைமை பொறுப்பை ஏற்று இருக்கிற கலைஞர் அவர்கள் மட்டும், அல்லது அமைச்சரவை மட்டும், இந்தக் காரியத்தில் ஈடுபட்டால் போதாது. பொறுப்புள்ள உறுப்பினராக இருக்கிற திரு. வரதராசன் போன்றவர்களும் இந்தக் காரியத்தில் ஈடுபட்டு, அரசின் கரத்தை வலுப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். கடமை தவறாத நல்லவர் அவர். ஆகையினாலே, இதைச் செய்வார் என்று நான் நம்புகிறேன்.

ராதாபுரம் நகரத்தை மையமாகக் கொண்டு நகரப் பேருந்து இயக்குதல்.

* 7540 திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

[1990 ஆகஸ்ட் 21

ராதாபுரம் நகரத்தை மையமாகக் கொண்டு நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ராதாபுரம் நகரம் இன்றையவரை ஒரு கிராமப் பஞ்சாயத்தாகவே இருந்து வருகிறது. இது ஒன்றியத் தலைநகராகவும், தொகுதியின் தலைநகராகவும், தாலுக்காவின் தலைநகராகவும் இருந்து வருகிறது. ஜனத்தொகை 10 ஆயிரத்திற்கும் மேலே இருக்கிறது. மாத வருமானம், கிராமப் பஞ்சாயத்திற்கு 20 ஆயிரத்திற்கும் மேலே இருக்கிறது. பல் வேறு அலுவலகங்கள், அதாவது, மேல்நிலைப் பள்ளி, அரசு மருத்துவமனை, சப்-ரிஜிஸ்டிரார் ஆபிஸ் தாலுக்கா ஆபிஸ் போன்ற இப்படிப்பட்ட பல்வேறு அலுவலகங்கள் எல்லாம் அங்கே இருக்கிற காரணத்தாலே, தொகுதியில் பல்வேறு பகுதிகளிலே இருக்கிற மக்கள் தொடர்பு கொள்வதற்கு, இதை நகரப் பேருந்தை இயக்கும் மையமாக அறிவிக்க அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் ஏற்கனவே 30 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் அருகாமையில் அமைந்திருக்கிற பனகுடி, வள்ளியூர், திசையன்விளை, கன்னியாகுமரி போன்ற பேரூராட்சிகளோடு நகரப் பேருந்துகளால் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. இந்த ராதாபுரம் வழியாக 24 பேருந்துகள் நாள் ஒன்றுக்கு 114 ஒரு வழிப் பயணத்துடன் அந்த வழியாகச் சென்று கொண்டிருக்கிற காரணத்தால்தான் தற்போது ராதாபுரத்தை நகரம் என அறிவிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று இந்த அரசு கருதுகிறது. இருந்தாலும் உறுப்பினருடைய வேண்டுகோளை ஏற்று, தற்போதைய சூழ்நிலையில் நகரமாக இதை அறிவிக்க வேண்டுமா என்பதை அரசு பரிசீலனை செய்யும்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தொகுதி பரவலாக பல பகுதிகளாக சிதறிய ஒரு தொகுதியாகக் காணப்படுகிற காரணத்தால், ஒதுங்கி இருக்கிற பல்வேறு முனைகளில் அமைந்திருக்கிற கிராமங்களோடு தொடர்பு கொள்வதற்கு இந்த 35 கிலோ மிட்டர் என்று வரையறை இருக்கிற காரணத்தாலே, தொடர்பு கொள்ள முடியாமல் மக்கள் தவிக்கிறார்கள். உதாரணமாக உவரி

1990 ஆகஸ்ட் 21]

கன்னியாகுமரி பார்டரிலே எல்லாம் எங்கள் கிராமங்கள் வருகின்றன. இப்படிப்பட்ட பகுதிகளிலேயிருந்து வருகின்றவர்களுக்கு எல்லாம் இந்த கிலோ மீட்டர் கணக்கு தடையாக இருக்கிற காரணத்தால், ஜனத்தொகை, மாத வருமானம் இதையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு, இதை நகரப் பேருந்துகளை இயக்கும் மையமாக நீங்கள் நிச்சயமாக ஆக்கவேண்டும் என்ற வேண்டுகோளை எனது தொகுதி மக்கள் சார்பாக அரசுக்கு வைக்கிறேன். ஆவன செய்ய வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இந்தக் கோரிக்கையைப் பரிசீலிக்கும்.

கம்பம்-சென்னைக்குக் குளிர் சாதனம் பொருத்தப்பட்ட பேருந்து விடுதல்.

* 9367 திரு. நா. இராமகிருஷ்ணன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கம்பம்-சென்னைக்குக் குளிர் சாதனம் பொருத்தப்பட்ட பேருந்து விட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,

இல்லை.

9-35 மணி

திரு. நா. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பத்திலிருந்து சென்னைக்கு 400 மைல்களுக்கு மேலாக பயணிகள் பயணம் செய்வதால், கோடைகாலத்தில் அதிகமான வெப்பத்தால் தாக்குண்டு, பயணிகள் அவதியுறுகிறார்கள். அந்தப் பயணிகளின் கஷ்டத்தை உணர்ந்தாவது கம்பத்திலிருந்து சென்னைக்கு கோடை காலத்தில் மட்டும் குளிர்சாதனம் பொருத்தப்பட்ட பேருந்து விடமுடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, சென்னையிலேயிருந்து கம்பம் வரை 2 குளிர்சாதனப் பேருந்துகள் இயக்கப்பட்டன. போதுமான அளவிற்கு வசூல் இல்லாத காரணத்தினால்தான் அந்தப் பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே தற்போதைய சூழ்நிலையில் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.